நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 346 /2025**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிதா |
| தந்தை / கணவர் பெயர் | : | சிவக்குமார் |
| கிராமம் | : | குட்டப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 08–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.06PM.

1. நான் தற்போது குட்டப்பட்டி கிராமம் தோட்டிகாட்டில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். 01.02.2025ம் தேதி மாலை 6.30 மணி அளவில் நானும், எனது கணவரும், என்னுடைய வீட்டில் இருந்து குட்டப்பட்டிக்கு பால் ஊற்றுவதற்காக என்னுடைய கணவருடைய இருச்சக்கர வாகனத்தில் எனது கணவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு

வந்துகொண்டிருந்தோம்.

2. மாதநாய்க்கன்பட்டி ரோட்டில் வந்து குட்டப்பட்டி பிரிவு ரோட்டில் திரும்பும்போது நால் ரோட்டில் இருந்து இருச்சக்கரவாகனத்தில் வேகமாக வந்த எதிரி நாங்கள் வந்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். அதில் எனக்கு இடது கண் மற்றும் இடது காலிலும் அடிப்பட்டது. எனது கணவருக்கு நெற்றியிலும், வலுது கையில் தோள்பட்டையிலும் அடிப்பட்டது.
3. காயம்பட்ட எங்கள் இருவரையும் அருகில் இருந்தவர்கள் நங்கவள்ளி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். எதிரியையும் நாங்கள் தான் நங்கவள்ளி அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். அங்கு எங்களுக்கு முதல் உதவி சிசிச்சை அளித்தார்கள். அங்கிருந்து மேல் சிசிச்சைக்காக பிரித்தம் மருத்துவமனைக்கு நானும் எனது கணவரும் சென்று சேர்ந்தோம். எனது கணவருக்கு அங்கு அறுவை சிசிச்சை செய்தனர். நங்கவள்ளி மருத்துவமனையில் எதிரிக்கு சிசிச்சை அளிக்க மறுத்துவிட்டனர். அவர் குடிபோதையில் இருந்தார். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை.
4. இந்த விபத்துக்கு எதிரியின் வேகம் தான் காரணம். நாங்கள் மெதுவாகத்தான் சென்று கொண்டிருந்தோம். போலீசார் நான் பிரித்தம் மருத்துவமனையில் இருந்தபோது என்னை விசாரித்தனர். நான் நடந்ததை சொன்னேன். போலீசார் படித்து காண்பித்தனர். பிறகு கையெழுத்து செய்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.19PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42—ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 346 /2025

## P.W. 2 —ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | குட்டப்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 2 |
| வயது | : | 47 |

*1969—ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969—ஆம் வருடத்திய 44—வது மத்திய சட்டம் )—ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026—ஆம் வருடம், ஜனவரி மாதம், 08—ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:— 12.20PM.

1. நான் தற்போது குட்டப்பட்டி கிராமம் தோட்டிகாட்டில் குடியிருக்கிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். 01.02.2025ம் தேதி மாலை 6.00 மணி அளவில் எனது வீட்டில் இருந்து பால் எடுத்துக்கொண்டு என் மனைவியுடன் என்னுடைய ஸ்டார்சிட்டி TN 30 S 3822 இரு சக்கர வாகனத்தில்

குட்டப்பட்டியில் உள்ள பால் சொசைட்டிக்கு பால் ஊற்றுவதற்காக நான் பைக்கை ஓட்டி கொண்டு பின்னால் எனது மனைவியை உட்கார வைத்து கொண்டு மாதநாயக்கன்பட்டியில் இருந்த விருதாசம்பட்டி செல்லும் சாலையில் சென்றேன்.

2. குட்டப்பட்டி ரோடு செல்வதற்காக என்னுடைய வாகனத்தை வலது பக்கமாக திருப்பி சென்றபோது விருதாசம்பட்டி பக்கம் இருந்து வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த எதிரி நான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். வலது தோள்பட்டையில் அறுவை சிசிச்சையும், வலது பக்க மூளையில் அடிப்பட்டது. அடிப்பட்டவுடன் நான் மயக்கம் ஆகிவிட்டேன்.
3. பிரித்தம் மருத்துவமனையில் எனக்கு சிசிச்சை அளிக்கப்பட்டது. இந்த விபத்திற்கு எதிரியின் வேகமும், கவனக்குறைவும்தான் காரணம். நான் குட்டப்பட்டி ரோட்டில் இண்டிகேட்டர் போட்டுவிட்டு முழுவதுமாக திரும்பிய நிலையில் எதிரி விருதாசம்பட்டி ரோட்டில் இருந்து வேகமாக வந்து எனது இருசக்கர வாகனத்தின் பின்புறமாக எனது மனைவி அமர்ந்திருந்த காலின் மீது மோதினார். மயக்கம் ஆனதால் எதிரியை என்னால் பார்க்கவில்லை.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.30PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**